بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْم   نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْم   وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகத்துவமிக்க சஹாபாக்களான ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஜப்பார் பின் சஹர் (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24 ஆகஸ்ட் 2018** அன்று ஆற்றிய **ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரின் தந்தையார் சாபித் பின் கைஸ் ஆவார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் ஷமூஸ் பின்த் அபூ ஆமிர் ஆகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவர்களுக்கும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். உஹது போரின் போது எதிரிகளின் கடுமையான திடீர் தாக்குதலின் விளைவாக முஸ்லிம்கள் சிதறுண்டனர். அப்போது ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மரணத்திற்கான பைஅத்தும் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பட்டியலிட்டிருந்த அம்பு எய்தும் வீரர்களில் அன்னாரும் ஒருவராவார். அன்னார் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவராவார்.

பத்ர் யுத்தத்திலும் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்தின் போது சஹாபாக்களிடத்தில், நீங்கள் எதிரிகளை போர்க்களத்தில் எதிர் கொள்ளும் போது அவர்களுடன் எப்படி சண்டையிடுவீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒரு சமுதாயம் எங்களுடைய அம்பிற்கு இலக்காகும் தூரம் வரை வந்தடைந்தால் நாங்கள் அவர்கள் மீது அம்புகளை எய்துவோம். அவர்கள் எங்களுடைய கற்கள் சென்றடையும் தூரம் வரை எங்களை வந்தடைந்து விட்டால் பின்னர் நாங்கள் அவர்கள் மீது கற்களை எறிந்து கொண்டு செல்வோம். எதிரிகள் எங்களுடைய ஈட்டிகள் சென்றடையும் தூரம் வரை வந்தடைந்து விட்டால் நாங்கள் அவர்கள் மீது ஈட்டிகளை எறிவோம். எங்களது ஈட்டிகள் உடைந்து விட்டால் பின்னர் அவர்கள் வாள்கள் மூலமாக கொலை செய்யப்படுவார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்படித்தான் போர் புரிய வேண்டும். எவர் ஒருவர் போர் புரிவாரோ அவர் ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் கூறிய வழிமுறைக்கேற்ப போர் புரியட்டும் என்று கூறினார்கள்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் உஹது போர் நாளன்று தனது வாளுடன் வீட்டிற்கு வந்தார்கள். அன்னாருடைய வாள் அதிகமாக சண்டையிடப்பட்டதன் காரணமாக வளைந்திருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடத்தில், பாராட்டுதலுக்குரிய இந்த வாளை நீங்கள் பாதுகாப்பாக வையுங்கள். இது போர் மைதானத்தில் மிகவும் பயனளித்தது என்று கூறினார்கள்.

அதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் இன்று வாளினால் வீரத்தை சிறப்பாக வெளிப்படுத்தினீர்கள் என்றால் ஹஸ்ரத் சுஹைல் பின் ஹனீஃப் மற்றும் அபூ தஜானாவும், ஆஸிம் பின் சாபித்தும், ஹாரிஸ் பின் ஸமாவும் வாளின் மூலம் வீரத்தை சிறப்பாக வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதத்தில் அஸல் மற்றும் காரா கோத்திரத்தின் சில மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் கூறினார்கள். எங்களது கோத்திரத்தைச் சார்ந்த பலர் இஸ்லாத்தின் பக்கம் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். நீங்கள் சில நபர்களை எங்களுடன் அனுப்பி வையுங்கள். அவர்கள் எங்களை முஸ்லிம்களாக ஆக்கட்டும். மேலும்

இஸ்லாத்தின் போதனையை கற்றுத் தரட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழுவை ஆஸிம் பின் சாபித் அவர்களது தலைமையில் அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஆனால் உண்மையில் அந்த மக்கள் பொய்யர்களாக இருந்தனர் என்பது பின்னர் தெரிய வந்தது. மேலும் பனூ லஹ்யானின் சதித்திட்டத்தின் பெயரில் அவர்கள் மதீனா வந்தார்கள்.

பனூ லஹ்யான் இந்த பணிக்கு ஈட்டுத் தொகையாக அசல் மற்றும் காரா கோத்திரத்தின் மக்களுக்கு ஏராளமான ஒட்டகங்களை பரிசாக நிர்ணயித்தான். அசல் மற்றும் காராவைச் சார்ந்த இந்த நம்பிக்கை துரோகிகள் அஸ்ஃபான் மற்றும் அதற்கு இடையிலுள்ள இடத்தை அடைந்தார்கள். அப்போது பனூ லஹ்யானிற்கு இரகசியமாக தகவல் அனுப்பி வைத்தனர். எங்களுடன் முஸ்லிம்கள் வருகின்றனர். நீங்கள் அவர்களைக் கொலை செய்ய வந்து விடுங்கள்.

இந்த தகவலின் பெயரில் பனூ லஹ்யான் கோத்திரத்தைச் சார்ந்த இருநூறு இளைஞர்கள் முஸ்லிம்களைப் பிடிப்பதற்காக வெளியேறினர். அவர்களில் நூறு பேர் அம்பு எய்தும் வீரர்களாக இருந்தனர். ரஜீஃ என்ற இடத்தில் முஸ்லிம்களைப் பிடித்தனர். ஆஸிம் அவர்களும் அவர்களுடன் வந்தவர்களும் சண்டையிட்டார்கள். இறுதியில் சண்டையிட்டவாறே ஷஹீதானார்கள்.

ஷஹீதாக்கப்பட்டவர்களில் ஆஸிம் பின் சாபித்தும் ஒருவராவார் என்ற தகவல் மக்கத்து குரைஷிகளுக்கு கிடைத்தது. ஆஸிம் பத்ர் சந்தர்ப்பத்தின் போது குரைஷிகளின் ஒரு பெரிய தலைவரை கொலை செய்திருந்தார்கள். எனவே குரைஷிகள் ரஜீஃ என்ற அந்த இடத்தை நோக்கி சிறப்பான நபர்களை அனுப்பி வைத்தனர். மேலும் ஆஸிமுடைய தலையையோ அல்லது ஏதாவதோர் உறுப்பையோ துண்டித்துக் கொண்டு வரும்படி அந்த நபர்களுக்கு கட்டளையிட்டிருந்தனர். இதன் மூலம் தனது மனதிற்கு ஆறுதலை ஏற்படுத்திக் கொள்ளவும், பழிவாங்கும் உணர்வைத் தீர்த்துக் கொள்வற்கும் இவ்வாறு செய்தனர். ஆனால் ஆஸிம் அவர்களின் உடலை தேனீக்களின் கூட்டம் பாதுகாத்தது. மேலும் தமது தீய எண்ணத்தில் அவர்களால் ஒருபோதும் வெற்றியடைய முடியவில்லை.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் எதிரிகளை எதிர்கொண்டு அம்புகளை எய்து கொண்டே சென்றார்கள். மேலும் இந்த கவிதையை படித்துக் கொண்டே சென்றார்கள். அதன் மொழியாக்கம் இதுவாகும். அதாவது மரணம் உண்மையாகும். வாழ்க்கை வீணானதாகும். இறைவன் ஒருவரைக் குறித்து முடிவெடுத்து விட்டால் அதுவே வெளிப்படும். அந்த மணிதனும் இறைவனின் தீர்ப்பை ஒப்புக் கொண்டாக வேண்டும். ஹஸ்ரத் ஆஸிம் அவர்களிடம் அம்புகள் தீர்ந்து விடும் போது பின்னர் ஈட்டியைக் கொண்டு சண்டையிடுவார்கள். ஈட்டியும் உடைந்து விடுகின்ற போது வாளை உருவி சண்டையிட்டவாறே உயிரைக் கொடுத்து விட்டார்கள்.

இரண்டாவது சஹாபி ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் அன்ஸாரி அவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஹனீஃப் அன்னாரின் தந்தையாக இருந்தார்கள். தாயாரின் பெயர் ராஃபியின் மகளான ஹிந்த் என்பதாகும். தாயின் மூலமாக அன்னாருக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்களின் பெயர் அப்துல்லாஹ் மற்றும் நுஃமான் ஆகும். அவர்களின் சந்ததிகளில் அஸத், உஸ்மான் மற்றும் ஸஅத் போன்றவர்கள் மகனாக இருந்தார்கள். ஹஸ்ரத் சஹல் அவர்களின் சந்ததிகள் மதீனாவிலும், பாக்தாதிலும் வசித்து வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் ஹஸ்ரத் அலி அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

அன்னார் பத்ர் யுத்தம் உட்பட ஏனைய அனைத்து யுத்தங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இணைந்து போர் புரிந்தார்கள். ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் மகத்துவமிக்க சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். ஆனால் அன்னாரின் பொருளாதார நிலைமைகள் வலுவானதாக இருக்கவில்லை.

இப்னு அயீனா அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் சஹல் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ நஸீர் கோத்திரத்தின் செல்வங்களிலிருந்து ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் மற்றும் அபு தஜ்ஜானா ஆகியோரைத் தவிர்த்து வேறு எந்தவொரு அன்ஸாரி சஹாபிக்கும் எந்தவோர் பங்கையும் வழங்கவில்லை. ஏனென்றால் அவர்கள் இருவர்கள் மட்டும் தான் ஏழைகளாக இருந்தனர்.

ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் மகத்துவமிக்க சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் உஹது போரிலும் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றார்கள். அந்நாளில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மரணத்திற்கும் கூட பைஅத் செய்திருந்தார்கள். அன்னார் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்களுக்கு முன்னால் கேடயமாக மாறி துடிப்புடன் ஒன்றிணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். எதிரிகளின் கடுமையான தாக்குதலின் காரணமாக முஸ்லிம்கள் சிதறுண்டு போயினர். அந்நாளில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி அம்பு எய்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், சஹலிடம் அம்மைப் கொடுங்கள். ஏனென்றால் அவருக்கு அம்பு எய்துவது எளிதான காரியமாகும்.

அடுத்து அறிவிப்பு செய்யப்படுகின்றது. கஸூல் என்ற ஒரு கைதேர்ந்த ஈட்டி எறியக்கூடிய யூத இளைஞர் ஒருவர் இருந்தார். ஒரு சிறு குழுவை அழைத்துக் கொண்டு முஸ்லிம்களின் பெரிய தலைவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வீட்டை விட்டு வெளியேறினான். ஹஸ்ரத் அலி அவர்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அப்போது அவனை கொலை செய்து விட்டார்கள். மேலும் அவனது தலையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அன்னார் கொண்டு வந்தார்கள். அவனுடன் இருந்த மற்றவர்கள் ஓடி விட்டனர். ஓடி விட்ட அந்த மக்களை பிடிப்பதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலியின் தலைமையிலேயே பத்து நபர்களை உள்ளடக்கிய ஒரு சிறு குழு ஒன்றை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அந்த நிராகரிகப்பாளர்களை பின் தொடர்ந்து பிடித்து கொலை செய்தனர்.

அதற்கு காரணம் என்னவென்றால், அந்த எதிரிகள் போர் செய்வதற்காகவும், மறைந்திருந்து தாக்குதல் நடத்தி முஸ்லிம்களை கொலை செய்வதற்காகவும் வந்திருந்தனர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் அப்படையில் சென்றவர்களில் ஹஸ்ரத் அபூ தஜ்ஜானா அவர்களும், ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் அவர்களும் அடங்குவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படை அல்கரா பள்ளத்தாக்கை வந்தடைந்த போது யூதர்கள் ஏற்கனவே போருக்காக ஆயத்தமாக இருந்தனர். எனவே அவர்கள் முஸ்லிம்களை அம்புகளால் வரவேற்றனர். முஸ்லிம்கள் மீது அம்பு எறியத் தொடங்கினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக ஸஃப்ஃபை ஒழுங்குபடுத்தும்படி கூறினார்கள். பின்னர் கொடிகளில் ஒன்றை ஹஸ்ரத் ஹானிப் பின் முன்ஸிர் அவர்களிடமும், இரண்டாவது கொடியை ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் அவர்களிடமும், மூன்றாவது கொடியை ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்களிடமும் ஒப்படைத்தார்கள். இந்தப் போரின் மூலமாக முழுப் பகுதியும் முஸ்லிம்களின் ஆளுமைக்கு கீழ் வந்தன. இங்கு அல்லாஹ் வெற்றியை வழங்கினான். மேலும் அல்லாஹ் இங்கிருந்து முஸ்லிம்களுக்கு பெரும் செல்வத்தையும் வழங்கினான்.

ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை நோக்கி கூறினார்கள். நீங்கள் மக்காவிற்கு எனது தூதராகச் செல்லுங்கள். நீங்கள் அங்கு சென்று எனது சலாத்தை எட்ட வையுங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு மூன்று விஷயங்களுக்கு கட்டளையிடுகின்றார் என்று கூறுங்கள். ஒன்று, உங்களின் மூதாதையர்களின் மீது சத்தியம் செய்யாதீர்கள். மூதாதையர்களின் மீது சத்தியம் செய்வது தடையாகும். பாவமாகும்.

நீங்கள் இயற்கைக் கடனை நிறைவேற்ற அமர்ந்தால் உங்களது முகத்தையும், முதுகையும் கிப்லாவை பார்க்கும் வகையில் அமராதீர்கள். வடக்கு நோக்கியோ அல்லது தெற்கு நோக்கியோதான் அமர வேண்டும். இதே போன்று மூன்றவாது அறிவுரை என்னவென்றால், எலும்பையும், சாணங்களையும் கொண்டு நீங்கள் இஸ்திஞ்சா (சுத்தம் செய்தல்) செய்யாதீர்கள்.

ஹஸ்ரத் அலி அவர்களிடத்தில் பைஅத் செய்யப்பட்டது. அவர்களுடன் பைஅத் வாங்கப்பட்ட போது சஹல் பின் ஹனீஃப் அவர்களுடம் உடன் இருந்தார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள் பஸாராவை நோக்கிச் சென்ற போது சஹல் பின் ஹனீஃப் அவர்களை தமது செயல் தலைவராக நியமித்து விட்டுச் சென்றார்கள். ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் அவர்களின் மரணம் ஸஃப்ஃபன் போரிலிருந்து திரும்பி வரும் போது ஹிஜ்ரி **38** ஆம் ஆண்டு கூஃபா நகரில் நடந்தது. அவர்களது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் அலி அவர்கள் தொழ வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஹன்ஷ் பின் முஅத்தர் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் அவர்களின் மரணம் நிகழ்ந்த போது அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதற்காக ஹஸ்ரத் அலி அவர்கள் மைதானத்திற்கு வருகை தந்தார்கள். மேலும் அலி அவர்கள் ஜனாஸாவில் ஆறு தக்பீர்களை கூறினார்கள். இதனை சில மக்கள் விரும்பவில்லை. அப்போது ஹஸ்ரத் சஹல் பத்ரி சஹாபி ஆவார் என்று அன்னார் அவர்களிடம் கூறினார்கள். அவர்களின் ஜனாஸா ஜபானா என்ற இடத்தை அடைந்த போது அப்போது ஹஸ்ரத் கர்லா பின் கஅப் தனது சில தோழர்களுடன் எம்மை வந்து சந்தித்தார். அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களிடம் கூறினர். அமீரல் முஃமினீன் அவர்களே! எங்களால் ஹஸ்ரத் சஹல் அவர்களது ஜனாஸாவில் கலந்து கொள்ள

முடியவில்லை. அப்போது ஹஸ்ரத் அலி அவர்கள் ஹஸ்ரத் சஹல் அவர்களுக்காக ஜனாஸா தொழுகையை தொழ அனுமதி வழங்கினார்கள். எனவே அவர்கள் ஹஸ்ரத் கர்லா அவர்களின் இமாமத்தின் கீழ் ஹஸ்ரத் சஹல் அவர்களுக்காக ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

மூன்றாவது சஹாபி ஜப்பார் பின் சஹர் ஆவார்கள். சஹர் பின் உமைய்யாவின் மகனாக அன்னார் இருந்தார்கள். ஹஸ்ரத் ஜப்பார் எழுபது அன்ஸாரிகளுடன் இரண்டாவது பைஅத்தே உக்பாவின் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் ஜப்பார் மற்றும் ஹஸ்ரத் மிக்தார் பின் அம்ர் ஆகியோருக்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டினார்கள். பத்ர் யுத்தத்தின் போது அன்னாரது வயது **32** ஆக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை ஹாரிஸ் அதாவது பேரீச்சம் பழங்களின் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக கைபர் அனுப்பி வந்தார்கள். அன்னாரின் மரணம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி **30** ஆம் ஆண்டு மதீனாவில் நிகழ்ந்தது. மரணத்தின் போது அன்னாருக்கு வயது **62** ஆக இருந்தது. ஹஸ்ரத் ஜப்பார் பத்ர், உஹது மற்றும் ஹந்தக் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

பத்ர் யுத்தத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நவ்ஃபல் பின் ஹவீல் மக்கத்து குரைஷிகளின் இணை வைப்பவர்களின் ஒரு தலைவர் ஆவார். அவனுக்கு எதிராக நீயே எனக்கு போதுமானவனாக இருப்பாயாக.

அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஜப்பார் பின் சஹர் அவர்கள் அந்த நபரை கைதியாக பிடித்து வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள் அவனிடத்தில் சென்றார்கள். பின்னர் அவனை கொலை செய்து விட்டார்கள். பத்ர் யுத்தத்தில் செய்த துஆ இவ்வாறு வருகின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. அவன் என்னிடமிருந்து எனது துஆவை ஒப்புக் கொண்டுள்ளான்.

மற்றொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த போது ஒவ்வொரு நபரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது வீட்டில் தங்க வேண்டும் என்று விருப்பம் கொண்டனர். இது தொடர்பாக ஏராளமான ஆதாரங்கள் வருகின்றன. ஆயினும் எனது ஒட்டகம் எங்கு அமருமோ அதுவே எனது இருப்பிடமாக இருக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப இங்கிருந்து ஒட்டகம் படிப்படியாக முன்னேறி மஸ்ஜிது நபவியின் வாசல் வரை வந்தடைந்தது. அப்போது ஹஸ்ரத் ஜப்பார் பின் சஹர் இந்த நம்பிக்கையில் ஒட்டகத்தை எழுப்பினார்கள். அதாவது ஒட்டகம் பனூ சல்மாவின் வீதியில் சென்ற நின்று விட வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் அந்த ஒட்டகம் எழவேயில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழே இறங்கினார்கள். கூறினார்கள். நாம் இங்கேயே தங்குவோம். இன்ஷா அல்லாஹ். மேலும் அன்னார் இந்த வசனத்தை ஓதினார்கள்.

وَقُلْ رَّبِّ اَنْزِلْنِيْ مُنْزَلًا مُّبٰرَكًا وَّاَنْتَ خَيْرُ الْمُنْزِلِيْنَ அதாவது என் இறைவா! என்னை நீ அருளுக்குரிய இடத்தில் இறக்குவாயாக. நீயே சிறந்த இடத்தை அருளுகின்றாய்.

பின்னர் யார் இங்கு மிக அருகில் இருக்கின்றார்கள்**?** என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது எனது வீடாகும். இது எனது வீட்டின் கதவாகும் என்றும் நாங்கள் உங்களது பொருட்களை உள்ளே வைத்து விட்டோம் என்றும் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சரி, சென்று நான் ஓய்வெடுப்பதற்கான இடத்தை ஆயத்தப்படுத்துங்கள் என்று கூறினார்கள். அவர்கள் சென்றனர். சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓய்வெடுப்பதற்குரிய இடத்தை தயார் செய்தனர்.

ஷாஷ் பின் கைஸ் முஸ்லிம்களிடம் கடுமையான பகைமையும் பொறாமையும் கொண்டிருந்தார். ஒரு முறை முஸ்லிம்கள் அமர்ந்திருந்த ஒரு சபையை கடந்து சென்றார். அறிவீனமான காலகட்டத்திற்குப் பிறகு இஸ்லாத்தின் மூலமாக அவர்களுக்கு கிடைத்த அருளினால் முஸ்லிம்கள் தங்களுக்குள் அமர்ந்து அன்புடனும், நேசத்துடனும் பேசி சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஷாஷ் பின் கைஸ் கூறினான். பனூ கீலா கோத்திரத்தின் தலைவர் அந்த பகுதியில் அமர்ந்திருந்தார். எதுவரை அந்த கோத்திரத்தின் தலைவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருக்கின்றார்களோ அதுவரை

நமக்கு நிம்மதி கிடைக்க முடியாது. அவன் தன்னுடன் இருந்த ஒரு யூதனை இந்த பணியைக் கொடுத்து அனுப்பி வைத்தான். முஸ்லிம்களிடம் சென்று அவர்களுடன் அமர்ந்து, யுத்தம் மற்றும் அதற்கு முன்பிருந்த சூழலின் நிலைகளைப் பற்றி பேச வேண்டும் என்றும் பனித்தான். அவனும் அவ்வாறே செய்தான்.

அவர்கள் ஒரு நேரத்தில் தங்களுக்கிடையில் அன்புடனும் நேசத்துடனும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த குழப்பத்தின் காரணமாக தங்களுக்குள் கடும் வாக்குவாதம் செய்யத் தொடங்கினர். சண்டையிட்டனர். தற்பொருமை கொண்டனர். எந்த அளவுக்கு என்றால் அவர்களில் இரு நபர்களான ஹஸ்ரத் அவ்ஸ் பின் கைஸி மற்றும் ஜப்பார் பின் சஹர் அவர்களும் தங்களுக்குள் சண்டையிடத் துணிந்தனர். அவர்களில் ஒருவர் மற்றவரை நோக்கிக் கூறினார். நீங்கள் விரும்பினால் இப்போதும் கூட போருக்காக ஆரம்பத்தை செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி சென்று சேர்ந்தது. எனவே அன்னார் அவ்ஸ் மற்றும் ஹஸ்ரஜ் அவர்களிடத்தில் சென்றார்கள். அன்னாருடன் முஹாஜிரீன் சஹாபாக்களும் சென்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களின் கூட்டமே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் மத்தியில் அல்லாஹ்வின் தூதர் இருக்கின்ற நிலையில் இப்போதும் கூட நீங்கள் அறிவீனமான காலகட்டத்தில் செய்த வாதத்தை செய்கின்றீர்களா? அல்லாஹ் உங்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் வழிகாட்டியுள்ளான். மேலும் அதன் மூலம் உங்களுக்கு கண்ணியத்தை வழங்கி உங்களிடமிருந்த அறிவீனமான விஷயங்களை அகற்றி விட்டான்.

அப்போது இதுவொரு ஷய்த்தானிய தூண்டுதலாகும் என்பதையும், ஷய்த்தான் விரித்த வலையில் நாம் சிக்கிக் கொண்டோம் என்பது சஹாபாக்களுக்கு புரிந்து விட்டது. எனவே அவர்கள் தங்களது ஆயுதங்களை எறிந்தனர். மேலும் அழத் தொடங்கினர். அவ்ஸ் மற்றும் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த நபர்கள் தங்களுக்குள் கட்டி ஆரத்தழுவிக் கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாக கட்டுப்படுவதாக கூறி அங்கிருந்து திரும்பிச் சென்றனர். அல்லாஹ் முஸ்லிம்களின் எதிரியான ஷாஷ் பின் கைஸ் மூட்டிய நெருப்பை தணித்து விட்டான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக இந்த ஒரு தருணத்தில் ஷய்த்தானுடைய ஏமாற்றுதலுக்கு சஹாபாக்கள் இலக்காகி விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் ஏன் அறிவீனமான காலகட்டத்திற்கு திரும்புகின்றீர்கள் என்ற உணர்வை ஊட்டிய போது அவர்கள் தங்களது தவறை உணர்ந்து வெட்கத்திற்கு உள்ளானார்கள். சமாதானத்தின் பக்கம் திரும்பினார்கள். இன்னும் சொல்லப்போனால், அன்பையும், சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தினார்கள். இதுவே சஹாபாக்களின் முன்மாதிரியாக இருந்தது.

ஆனால் இப்போது சில மக்கள் அற்ப விவகாரங்களில் போலியான கௌரவத்திற்கும் தற்பெருமைக்கும் இலக்காகி விடுகின்றனர். அப்படிப்பட்ட மக்களுக்கு இது ஒரு மகத்துமிக்க முன்மாதிரியாகும். ஒருவர் மற்றவரை கொலை செய்வதற்குத் தாகித்திருந்து போர் செய்து கொண்டே மக்கள் சகோதரர்களாக ஆகிவிட்ட போது இப்போது ஒரு கலிமாவை கூறக்கூடிய இன்னும் சொல்லப்போனால் ஒரே ஜமாஅத்தில் இருக்கக் கூடியவர்கள் ஏன் நான் என்ற அகந்தையை ஒழிக்க முடியாது?

பல விவகாரங்கள் நம்முன் வருகின்றன. போலி கௌரவத்தின் காரணமாக பகைமைகள் தொடர்கின்றன. சில இளைஞர்கள் எனக்கு எழுதுகின்றனர். எங்களது குடும்பங்களில் இருந்து வருகின்ற பழைய பகைமையின் காரணமாக புதிய தலைமுறையினரான நாங்கள் உறவுகளை நிலைநாட்ட விரும்புகின்றோம். ஆனால் பெரியவர்களின் காரணமாக எங்களால் அந்த உறவை நிலைநாட்ட முடியவில்லை.

இறைவன் அன்பு நேசத்திற்கான போதனையையே வழங்கியுள்ளான். ஒற்றுமைக்கான போதனையை வழங்கியுள்ளான். நம்மை ஒரு சமுதாயமாக ஆக்கியுள்ளான். எனவே நாம் ஒன்றுபட்ட ஒரு சமுதாயமாக வாழ வேண்டும். போலி கௌரவங்களில் மீண்டும் மூழ்கிவிடக்கூடாது. அல்லாஹ் எல்லோருக்கும் அறிவை வழங்குவானாக.

**மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்**